முன்னொரு காலத்தில் ஒரு தாய் பசியோடிருந்த ஏழு பிள்ளைகளுடன் வசித்து வந்தாள். ஒருநாள் தாயார் சுவையான உரொட்டி சுட்டாள். பிள்ளைகள் உரொட்டி சாப்பிடுவதற்காக சுற்றி நின்றார்கள். இதனை தாத்தா இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"அம்மா எனக்கு உரொட்டி தாருங்கள்" என ஒரு பிள்ளை கேட்டார்.

ஓ அன்பானவரே என்றார் இரண்டாவது பிள்ளை

ஓ அன்பான இனிமையானவரே என்றார் மூன்றாவது பிள்ளை

ஓ அன்பான இனிமையான நேசமானவரே என்றார் நான்காவது பிள்ளை

ஓ அன்பான இனிமையான நேசமான அழகானவரே என்றார் ஐந்தாவது பிள்ளை

ஓ அன்பான இனிமையான நேசமான அழகான நல்லவரே என்றார் ஆறாவது பிள்ளை

ஓ அன்பான இனிமையான நேசமானவ அழகான நல்ல கனிவானவரே என்றார் ஏழாவது பிள்ளை.

பிள்ளைகள் ஒருவரை விட ஒருவர் நல்ல சொற்களைக் கூறினர். ஏனெனில் அவர்கள் மிகவும் பசியாக இருந்ததுடன் மிகவும் கனிவானவர்கள்.

அம்மா எங்களுக்குப் பசிக்கிறது உரொட்டியைப் பிரித்துத் தாருங்கள் என்றார்கள்

ஆமாம்! "பிள்ளைகளே உரொட்டியைத் திருப்பும் வரை பொறுத்திருங்கள்". அதுவரை உரொட்டி எவ்வளவு மொத்தமாகவும் நறுமணமாகவும் வருகிறது எனப் பார்த்துக் கொண்டிருங்கள். உரொட்டி வேகியதும் பிரித்துச் சாப்பிடலாம் என்றார் அம்மா.

இவர்கள் கதைப்பதைக் கேட்ட உரொட்டிக்குப் பயம் பிடித்து விட்டது. உடனே உரொட்டி தானாகவே சட்டியிலிருந்து மறு பக்கமாகத் திரும்பியது. பின்பு கீழே துள்ளி விழுந்து உருண்டு உருண்டு வீதியால் ஓடத் தொடங்கியது.

அம்மா ஏய் நில்! எனக் கத்திக் கொண்டு கையில் தட்டையும் அகப்பையையும் பிடித்துக் கொண்டு உரொட்டிக்குப் பின்னால் ஓடினார். அவருக்குப் பின்னால் பிள்ளைகள் ஓடினர். கடைசியாக தாத்தா நொண்டி நொண்டி ஓடினார்.

உரொட்டி உருண்டு வேகமாக ஓடியது. ஒருவராலும் பிடிக்க முடியவில்லை. உரொட்டி தொலை தூரம் ஓடிக் கொண்டிருக்கும் போது ஒரு மனிதனைக் கண்டது.

“வணக்கம் உரொட்டி” என்றான் அந்த மனிதன்.

“வணக்கம் மனிதனே” என்றது உரொட்டி.

“சுவையான உரொட்டியே வேகமாக ஓடாதே, எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றான் மனிதன்.

“நான் தாயிடமிருந்தும் பசித்த பிள்ளைகளிடமிருந்தும் வயதான தாத்தாவிடமிருந்தும் ஓடி வருகிறேன். இப்போது உன்னிடமிருந்தும் ஓடுகிறேன் மனிதனே” எனக் கூறிக் கொண்டு ஓடியது.

உரொட்டி உருண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஒரு கோழியைக் கண்டது.

“வணக்கம்  உரொட்டி” என்றது கோழி.

“வணக்கம் கோழி “என்றது உரொட்டி.

“சுவையான உரொட்டியே வேகமாக ஓடாதே. எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றது கோழி.

நான் தாயிடமிருந்தும் பசித்த பிள்ளைகளிடமிருந்தும் வயதான தாத்தாவிடமிருந்தும் மனிதனிடமிருந்தம் ஓடி வருகிறேன். இப்போது உன்னிடமிருந்தும் ஓடுகிறேன் கோழியே”எனக் கூறிக் கொண்டு உரொட்டி ஓடியது.

உரொட்டி உருண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஒரு சேவலைக் கண்டது.

“வணக்கம் உரொட்டி” என்றது சேவல்.

“வணக்கம் சேவல்” என்றது உரொட்டி.

“சுவையான உரொட்டியே வேகமாக ஓடாதே. எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றது சேவல்.

“நான் தாயிடமிருந்தும் பசித்த பிள்ளைகளிடமிருந்தும் வயதான தாத்தாவிடமிருந்தும் மனிதனிடமிருந்தும் கோழியிடமிருந்தும் ஓடி வருகிறேன். இப்போது உன்னிடமிருந்தும் ஓடுகிறேன் சேவலே” எனக் கூறிக் கொண்டு உரொட்டி உருண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஒரு தாராவைக் கண்டது.

“வணக்கம் உரொட்டி “என்றது தாரா.

“வணக்கம் தாரா” என்றது உரொட்டி.

“சுவையான உரொட்டியே வேகமாக ஓடாதே. எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றது தாரா.

“நான் தாயிடமிருந்தும் பசித்த பிள்ளைகளிடமிருந்தும் வயதான தாத்தாவிடமிருந்தும் மனிதனிடமிருந்தும் கோழியிடமிருந்தும் ஓடி வருகிறேன். இப்போது உன்னிடமிருந்தும் ஓடுகிறேன் தாரா” எனக் கூறிக் கொண்டு உரொட்டி உருண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஒரு வாத்தைக் கண்டது.

“வணக்கம் உரொட்டி” என்றது வாத்து.

“வணக்கம் தாரா” என்றது உரொட்டி.

“சுவையான உரொட்டியே வேகமாக ஓடாதே. எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றது வாத்து.

“நான் தாயிடமிருந்தும் பசித்த பிள்ளைகளிடமிருந்தும் வயதான தாத்தாவிடமிருந்தும் மனிதனிடமிருந்தும் கோழியிடமிருந்தும் தாராவிடமிருந்தும் ஓடி வருகிறேன். இப்போது உன்னிடமிருந்தும் ஓடுகிறேன் வாத்து” எனக் கூறிக் கொண்டு உரொட்டி உருண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஒரு அன்னத்தைக் கண்டது.

“வணக்கம் உரொட்டி” என்றது அன்னம்.

“வணக்கம் அன்னம்” என்றது உரொட்டி.

“சுவையான உரொட்டியே வேகமாக ஓடாதே. எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றது அன்னம்.

“நான் தாயிடமிருந்தும் பசித்த பிள்ளைகளிடமிருந்தும் வயதான தாத்தாவிடமிருந்தும் மனிதனிடமிருந்தும் கோழியிடமிருந்தும் தாராவிடமிருந்தும் ஓடி வருகிறேன். இப்போது உன்னிடமிருந்தும் ஓடுகிறேன் அன்னம்” எனக் கூறிக் கொண்டு உரொட்டி உருண்டு உருண்டு ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஒரு பன்றியைக் கண்டது.

“வணக்கம் உரொட்டி” என்றது பன்றி.

“வணக்கம் பன்றி” எனக் கூறிக்கொண்டு உரொட்டி உருண்டு ஓடத் தொடங்கியது.

“உரொட்டியே இப்படி வேகமாக ஓடாதே . நாங்கள் அருகிலிருக்கும் ஓடையைக் கடந்து காட்டுக்குள் போகலாம். அங்கே பாதுகாப்பாக இருக்கலாம் “ என்றது பன்றி.

உரொட்டிக்கும் இது நல்ல யோசனையாகத் தோன்றியது.

“ஆனால் எனக்கு நீச்சல் தெரியாது” என்றது உரொட்டி.

“என்னில் ஏறிக் கொள். நான் மறுகரைக்குக் கொண்டு போய் விடுகிறேன்” என்றது பன்றி.

உரொட்டியும் பன்றியின் மேல் ஏறிக் கொண்டது.

சிறிது தூரம் நீந்தியதும் “உரொட்டியே எனது மூக்குக்கு அருகே வா. தண்ணீரில் நனையாமல் இருக்கலாம்” என்றது பன்றி.

உரொட்டியும் மூக்கருகே வந்தது. பன்றி “கொர் கொர்” என்று வாயைத் திறந்து இழுத்தது. உரொட்டி பன்றியின் வாய்க்குள் போனது. பன்றி உரொட்டியை சாப்பிட்டு விட்டது.

உரொட்டியும் போச்சுது. கதையும் முடிந்தது.